DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**CC.No. 47/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 1 | Caste | : | |
| Name | : | கிரின்சன் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 04th day of January 2023.
04.01.2023.

முதல் விசாரணை:-

1. நான் தங்கச்சிமடம் சூசையப்பர் பட்டிணத்தில் வசித்து வருகிறேன். மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன அடைக்களம் எனது அப்பா. ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை. கடந்த 16.09.2017-ம் தேதி இரவு 09.00 மணிக்கு அக்காள்மடம் புனித அன்னாள் பள்ளி அருகில் எனது சித்தப்பா வீட்டில் நடந்த விசேசத்திற்கு கலந்துகொண்டபோது எனது அப்பா சுருட்டு வாங்குவதற்காக வெளியில் வந்துவிட்டு வீட்டிற்கு திரும்பி வந்துகொண்டிருந்தார்.

2. பின்னர் எனது அப்பாவை காணவில்லை என்று நானும், எனது நண்பர் உயிர்த்தநாதன் என்பவரும் தேடி சென்றபோது என் அப்பா துாரத்தில் சென்றுகொண்டிருந்தார் அப்போது ஒரு வேன் வேகமாக மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றது. ஹாரன் எதுவும் அடிக்காமல் அதிகவேகமாக சென்று எனது அப்பாவை துாக்கிஎறிந்துவிட்டு சென்றுவிட்டது. துாரத்தில் இருந்ததால் எங்களுக்கு சரியாக தெரியவில்லை. பின்னர் நானும், எனது நண்பரும் அருகில் சென்று பார்த்போது என் அப்பாவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது.

3. பின்னர் அவ்வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றி இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு மருத்துவர் பரிசோதித்துவிட்டு என் அப்பா இறந்துவிட்டதாக கூறினார்.என் அப்பாவின் மீது மோதிய வாகனம் வேன் என்று தான் தெரியும், அந்த வாகனத்தின் பெயரை குறிப்பிட்டு என்னால் சொல்ல இயலாது.பின்னர் பாம்பன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது அது அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. புகார் மனுவை நான் எழுதவில்லை எனக்கு எழுதபடிக்க தெரியாது என்றால் சரிதான். புகாரில் போலீசார் கையொப்பம் மட்டும் வாங்கினார் என்றால் எனது சித்தப்பா எழுதி கொடுத்தார். கையெழுத்து மட்டும் தான் நான் போட்டேன். எனது அப்பா நடந்து சென்ற தூரம் கிட்டதட்ட 1/2 கிமீ என்றால் சரிதான். பொதுவாக சம்பவம் நடந்த இடம் இருட்டான இடம் என்றால் சரிதான். பொதுவாக இருட்டு நேரத்தில் நமக்கு முன்பாக வாகனம் வந்தால் லைட் வெளிச்சம் மட்டும் தான் தெரியும் வாகனம் தெரியாது என்றால் சரிதான்.

2. அதேபோல் தேசிய நெடுஞ்சாலையில் இரவு நேரம் ஆனாலும், பகல் நேரம் ஆனாலும், அதிகபட்சமான வாகனங்கள் செல்லும் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் ரோட்டில் வாகனங்கள் போய்கொண்டுதான் இருந்தது என்றால் சரிதான். பொதுவாக இரவு நேரங்களில் வாகனங்கள் எப்படி சென்றது என்று கணித்து சொல்லமுடியாது என்றால் சரிதான். புகாரிலும், போலீசார் விசாரணையிலும் ரோட்டிற்கு எந்த பக்கமாக என் அப்பா நடந்து சென்றார் என்று சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை.

3. சம்பவ தினத்திற்கு முன்பாகவே விசேசத்திற்கு நாங்கள் சென்றுவிட்டோம். எனது தகப்பனார் வயதானவர் இரவு நேரத்தில் கண் பார்வை மங்களாக தெரியும் என்றால் இல்லை. (எனது தகப்பனார் பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல், அவரது கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். மீண்டும் APP, சாட்சி வாகனம் அதிவேகமாக வந்ததாக சாட்சி சொன்னதாகவும் அதை பதிவு செய்யவேண்டும் என்று திறந்த நீதிமன்றத்தில் சொன்னார்.) கிறிஸ்துவ சுடுகாடு என்பது வேறு, புனித அன்னாள் பள்ளி பகுதி என்பது வேறு என்றால் சரிதான். நான் எனது தகப்பனார் இறந்ததற்கு இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். புனித அன்னாள் பள்ளிக்கு முன்பு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக பாம்பனில் இருந்து தங்கசிமடத்திற்கு செல்லவேண்டும் என்றால் பேருந்து வசதி, ஆட்டோ வசதி உண்டு நடக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் இல்லை.

4. சம்பவ நடந்த உடனே மருத்துவமனைக்கு எனது அப்பாவை கூப்பிட்டு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். சடங்கு, சம்பரதாயம் என்று 3 நாட்கள் வீட்டில் இருந்தோம் என்றால் 1 நாள் இருந்தேன். புகார் மனு கொடுத்த பின்பு என்னை போலீசார் தனியாக விசாரித்து எந்த வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான்.